# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8069801

C

1. District : திருச்சி / மாவட்டம் — PS : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு / காவல்நிலையம் — Year : 2020 / ஆண்டு — FIR No. 02/2020 / மு.த.அ. எண் — Date 01.06.2020 / நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) & 13(1)(d) of PC Act 1988

(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: IPC — Sections பிரிவுகள்: 120(B), 109, 463, 465, 468, 471, 477(A), 409

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள் — Date from : 2016 / நாள் முதல் — Date to : 2017 / நாள் வரை

Time Period : / நேர அளவு — Time from : / நேரம் முதல் — Time to : / நேரம் வரை

(b) Information Received at PS. Date : 01.06.2020 / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time : 10.00 hrs / நேரம்

(c) General Diary Reference : Entry No(s) — / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : — / நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 7 KM வடமேற்கு

Beat Number : — / முறைக் காவல் எண் — (b) Address : R-786, திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம், மக்கள் மன்றம், தில்லைநகர், திருச்சி / முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ம. நவநீதகிருஷ்ணன் / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — (b) Father's/ Husband's Name : த. மகுராஜ் / தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 31.07.1975 / நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : இந்தியன் / நாட்டினம் — (e) Passport No. : — / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — / வழங்கப்பட்ட நாள் — Place of Issue : — / வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : / தொழில் காவல் ஆய்வாளர் — (g) Address : / முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

கலம் 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

விரிவான விசாரணை மேற்கொண்டு உத்தரவுபடி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

திருச்சி, சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நடுவர் நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

காலம் 7ல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

1) திரு.மா.கார்மேகம், முன்னாள் செயலாளர், R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம், தில்லைநகர், திருச்சி. தற்போது செயலாளர், மத்திய அரசு அலுவலர்கள் கூட்டுறவு கட்டிட சங்கம், பொன்னகர், திருச்சி.

2) திரு.P.M.முத்துகுமார் @ P.M.குமார், முன்னாள் நிர்வாகக்குழுத்தலைவர், R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம், தில்லைநகர், திருச்சி. No.29/8, சாந்த ஷீலா நகர், வயலூர் மெயின் ரோடு, திருச்சி–16.

3) திருமதி.கு.சுசீலா, உறையூர் முன்னாள் சார்பதிவாளர்(மாவட்ட பதிவாளர் நிலை), உறையூர் சார்பதிவாளர் அலுவலகம், திருச்சி. தற்போது மாவட்ட பதிவாளர்(நிர்வாகம்), கும்பகோணம், தஞ்சாவூர் மண்டலம்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] பதவி [illegible] நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு [illegible] காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 1-6-2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13-30 hrs.

Name: பெயர் M. நசீர் ஜெரீனா
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, திருச்சி.

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண். 02/2020—ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

தமிழ்நாடு விழிப்புப்பணி ஆணைய Letter No. 4948/VC-I/2019-2, Dt.2.10.2019-ன்படியும், Commercial Taxes and Registration(H) Dept. Govt. Lr.No.11990/H/2019-1, Dt.31.12.2019—ன்படியும் மற்றும் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமூனா DE92/2017/COOP/TR, நாள்:15.03.2020ன்படியும் 1)திரு.மா.கார்மேகம், முன்னாள் செயலாளர், R—786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம், தில்லைநகர், திருச்சி. தற்போது செயலாளர், மத்திய அரசு அலுவலர்கள் கூட்டுறவு கட்டிட சங்கம், பொன்னகர், திருச்சி. 2) திரு.P.M.முத்துகுமார் @ P.M.குமார், முன்னாள் நிர்வாகக்குழுத்தலைவர், R—786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம், தில்லைநகர், திருச்சி. 3)திருமதி.கு.சுசீலா, உறையூர் முன்னாள் சார்பதிவாளர்(மாவட்ட பதிவாளர் நிலை), உறையூர் சார்பதிவாளர் அலுவலகம், திருச்சி. தற்போது மாவட்ட பதிவாளர்(நிர்வாகம்), கும்பகோணம், தஞ்சாவூர் மண்டலம். என்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட 1வது மற்றும் 3வது எதிரிகள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c) யின் படி பொது ஊழியர்கள் ஆவார்கள். 2வது எதிரி தனிநபர் ஆவார்.

மேற்கண்ட 1 முதல் 3 எதிரிகளால் திருச்சி, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி மண்டலத்துணைப்பதிவாளர் (வீட்டு வசதி) கட்டுப்பாட்டில் செயல்படும் R—786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கம் (மக்கள் மன்றம்), தில்லைநகர் சங்கத்தில் அரசாணை நெறிமுறைகளை மீறி விலை நிர்ணயக்குழுவின் விலை நிர்ணயம் பெறாமலும், பதிவாளர் (வீட்டு வசதி) முன் அனுமதி பெறாமலும் சங்கத்திற்கு சொந்தமான கடை மனைகளை மிகக்குறைந்த விலைக்கு கிரையம் செய்து சங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் சங்கத்திற்கு சொந்தமான இடங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலி மனைகள், கடை மனைகள் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றை விற்பனை செய்யப்படும் போது அரசாணை எண் 224 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்:27.11.2009 மற்றும் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கட்டளை, செயல்முறைகள் ஆணை ந.க.1674/2008/இ4 நாள் 21.12.2012 ஆகியவற்றின்படி விலை நிர்ணயக்குழு மூலம் விலை நிர்ணயம் செய்யப்பெற்று, பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் முன் அனுமதி

பெற்றே விற்பனை செய்திட வேண்டும். ஆனால் திருச்சி, தில்லைநகர், R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கத்தில் மேற்கண்ட அரசாணை நெறிமுறைகளின்படி விலை நிர்ணயக்குழுவின் விலை நிர்ணயம் பெறாமலும், பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை அவர்களின் முன் அனுமதி பெறாமலும் 08.08.2016 அன்று கடை மனை எண் 7 மற்றும் 11 ஆகியவற்றை திரு.T.S.M.பூபதி மற்றும் அவரது மனைவி திருமதி.S.நாகரெத்தினம் ஆகியேருக்கு வழிகாட்டி மதிப்பு சதுரடிக்கு ரூ.3,000/–ஆக இருந்த போது ஒரு சதுரடி ரூ.150/–க்கு விற்பனை செய்து, உறையூர் சார்பதிவகத்தின் ஆவண எண்கள் 5241/2016 மற்றும் 5242/2016 ஆகிய ஆவணங்கள் மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே 09.12.2016 மற்றும் 29.12.2016 ஆகிய தேதிகளில் திரு.M.திருசங்கு என்பவருக்கு விலை நிர்ணயக்குழுவின் விலை நிர்ணயம் பெறாமலும், பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை அவர்களின் முன் அனுமதி பெறாமலும். காலி மனையிடங்களை வழிகாட்டி மதிப்பு ஒரு சதுரடி ரூ.3,000/– ஆக இருந்த போது ஒரு சதுரடி ரூ.755/–க்கு விற்பனை செய்து உறையூர் சார்பதிவகத்தின் ஆவண எண்கள் 7360/2016 மற்றும் 7582/2016 ஆகிய ஆவணங்கள் மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டு சங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் விலை நிர்ணயக்குழுவின் விலை நிர்ணயம் பெறமாலும், பதிவாளர்(வீட்டுவசதி), சென்னை அவர்களின் முன் அனுமதி பெறாமலும் சங்க நிர்வாகக்குழுவின் 10.05.2017 தேதியிட்ட தீர்மானத்தில் கடை மனை எண்கள் 13, 24 மற்றும் 26 ஆகிய மனைகளுக்கு உண்டான முழுத்தொகையை சங்க உறுப்பினர்களான திரு.A.முத்துச்செல்வன், திருமதி.A.தில்சாத் பேகம் மற்றும் திருமதி.A.ஜீனத் பேகம் ஆகியோர்கள் 2001ஆம் ஆண்டே செலுத்திவிட்டபடியால் அவர்களுக்கு 2001ஆம் ஆண்டின் மதிப்பிற்கே மனைகளை விற்பனை கிரையம் செய்திட தீர்மானம் இயற்றப்பட்டு, அதனடிப்படையில் 22.05.2016 அன்று திரு.A.முத்துச்செல்வன் மற்றும் திருமதி.A.தில்சாத் பேகம் ஆகியோருக்கு கடை மனை எண்கள் 24 மற்றும் 26 ஆகியவற்றை ஆவண எண்கள் 2079/2017 மற்றும் 2080/2017 மூலமும், 26.05.2017 அன்று திருமதி.A.ஜீனத் பேகம் என்பவருக்கு கடை மனை எண் 13ஐ ஆவண எண் 2146/2017 மூலமும் வழிகாட்டி மதிப்பு ஒரு சதுரடி ரூ.3,000/– ஆக இருந்த போது ஒரு சதுரடி ரூ.150/–க்கு விற்பனை செய்து, உறையூர் சார்பதிவகத்தில்

மேற்கண்ட ஆவணங்கள் மூலம் கிரையம் செய்து கொடுக்கப்பட்டு, மேற்கண்டவாறு கடை மனைகளை முறைகேடாக விற்பனை செய்து சங்கத்திற்கு மிகப்பெரிய நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்திற்கு பெரும் நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள கடை மனைகள் விபரம், அதற்கான தொகை வசூலிக்கப்பட்ட நாள், ஆவண எண் மற்றும் நாள் பின்வருமாறு பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் பதிவு ஆவண எண் **2079/2017, 2080/2017** மற்றும **2146/2017** ஆகியவற்றில் பக்கம்–2இல் முறையே திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி காசோலை ரூ.2,40,000/–, ஆக்சிஸ் வங்கி காசோலை ரூ.3,30,000/– மற்றும் கர்நாடகா வங்கி காசோலை ரூ.3,00,000/– என மட்டும் குறிப்பிடப்பட்டு, தேதிகளை உள்நோக்கத்துடன் குறிப்பிடாமல் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று காசோலைகளின் தொகை 08.05.2017 மற்றும் 16.05.2017 ஆகிய தேதிகளில் சங்கத்திற்கு வங்கி கணக்கில் வரவாகியுள்ளது. மேற்கண்ட கடைமனைகளை வாங்கியுள்ளவர்களது பாக்கி தொகைகள் 2017ஆம் ஆண்டிற்கு முன்பாக செலுத்தப்படவில்லை.

| வ. எண் | கடை மனை | கிரையம் பெற்றவர் பெயர் | பரப்பளவு (சதுரடியில் ) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | வசூலித்த தொகை மற்றும் நாள் | | ஆவண எண் மற்றும் நாள் | சங்க தீர்மான விபரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | எண 24 | A.முத்து செல்வன் | 3200 | 25.03.2000 | 25.03.2000 | 1,00,000/– | 2079/2017 22.05.2017 | தீர்மான எண் 01 10.05.2017 |
| | | | | | 29.03.2000 | 75,000/– | | |
| | | | | | 29.03.2000 | 15,000/– | | |
| | | | | | 04.12.2000 | 20,000/– | | |
| | | | | | 17.10.2001 | 15,000/– | | |
| | | | | | 15.05.2002 | 15,000/– | | |
| | | | | | கூடுதல் | 2,40,000/– | | |
| | | | | | 08.05.2017 | 2,40,000/– | | |
| | | | | | ஆக மொத்தம் | 4,80,000/– | | |
| 2. | எண் 13 | A.ஜீனத் பேகம் | 2400 | 09.01.1995 | 21.09.1998 | 60,000/– | 2146/2017 26.05.2017 | தீர்மான எண் 01 10.05.2017 |
| | | | | | கூடுதல் | 60,000/– | | |
| | | | | | 16.05.2017 | 3,00,000/– | | |
| | | | | | ஆக மொத்தம் | 3,60,000/– | | |
| 3. | எண 26 | A.தில்சாத் பேகம் | 3200 | 19.12.2000 | 20.12.2000 | 50,000/– | 2080/2017 22.05.2017 | தீர்மான எண் 01 10.05.2017 |
| | | | | | 01.03.2001 | 50,000/– | | |
| | | | | | 31.03.2001 | 50,000/– | | |
| | | | | | கூடுதல் | 1,50,000/– | | |
| | | | | | 08.05.2017 | 3,30,000/– | | |
| | | | | | ஆக மொத்தம் | 4,80,000/– | | |

R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கத்தில் செயல்படுத்தப்பட்ட மனை திட்டங்களில் விற்பனை ஆகாத மனைகளை மேற்கண்ட சங்க உறுப்பினர்களுக்கு விற்பனை செய்ததில் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு மேற்படி சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது.

| வ. எ ண் | ஆவணம் எண் மற்றும் நாள் | கிரையம் பெற்றவர் பெயர் விபரம் | பத்திரப்படி கிரையம் செய்த நிலத்தின் அளவு/மதிப்பு (ரூ) | கிரையம் செய்த மதிப்பு (ரூ) | நிலம் கிரையம் செய்த போது அரசு வழிகாட்டி மதிப்பு (ரூ) | சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பு (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 5241/2016 08.08.2016 | திரு.T.S.M.பூபதி | 2400 ச.அடி/ ரூ.150/– | ரூ. 3,60,000/– | ரூ.3000 X 2400 ரூ. 72,00,000/– | ரூ. 68,40,000/– |
| 2. | 5242/2016 08.08.2016 | திரு.S.முத்து நாகரெத்தினம் | 2400 ச.அடி/ ரூ.150/– | ரூ. 3,60,000/– | ரூ.3000 X 2400 ரூ. 72,00,000/– | ரூ. 68,40,000/– |
| 3. | 7360/2016 09.12.2016 | திரு.M.திருசங்கு | 3640 ச.அடி/ ரூ.755/– | ரூ. 27,48,200/– | ரூ.3000 X 3640 ரூ. 1,09,20,000/– | ரூ. 81,71,800/– |
| 4. | 7582/2016 29.12.2016 | திரு.M.திருசங்கு | 6800 ச.அடி/ ரூ.755/– | ரூ. 51,34,000/– | ரூ.3500 X 6800 ரூ. 2,38,00,000/– | ரூ. 1,86,66,000/– |
| 5. | 2079/2017 22.05.2017 | திரு.A.முத்துசெல் வன் | 3200 ச.அடி/ ரூ.150/– | ரூ. 4,80,000/– | ரூ.3000 X 3200 ரூ. 96,00,000/– | ரூ. 91,20,000/– |
| 6. | 2080/2017 22.05.2017 | திருமதி. A.தில்சாத் பேகம் | 3200 ச.அடி/ ரூ.150/– | ரூ. 4,80,000/– | ரூ.3000 X 3200 ரூ. 96,00,000/– | ரூ. 91,20,000/– |
| 7. | 2146/2017 26.05.2017 | திருமதி. A.ஜீனத் பேகம் | 2400 ச.அடி/ ரூ.150/– | ரூ. 3,60,000/– | ரூ.3000 X 2400 ரூ. 72,00,000/– | ரூ. 68,40,000/– |
| | | | | ரூ. 99,22,200/– | ரூ. 7,55,20,000/– | ரூ. 6,55,97,800/– |

08.08.2016, 09.12.2016, 29.12.2016, 22.05.2017 மற்றும் 26.05.2017 ஆகிய தேதிகளில் முறைகேடாக விற்பனை செய்து, கிரைய பத்திரம் செய்து சங்கத்திற்கு மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூ.6,55,97,800/– நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சந்தை மதிப்பை கணக்கில் கொண்டால் மேற்கண்ட நிதியிழப்பு இன்னும் அதிகமாகும். மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.4இல் குறிப்பிட்டுள்ள திரு.M.திருசங்கு என்பவர் ஆவண எண் 2004/2017, நாள்17.05.2017ன்படி 6800 சதுரடி மனையை சதுரடி

ரூ.3,500/– வீதம் ரூ.2,38,00,000/–க்கு M/s. Eshcol Infra என்ற நிறுவனத்திற்கு மறுவிற்பனை செய்யப்பட்டுள்ளதும், வரிசை எண்.7இல் குறிப்பிட்டுள்ள திருமதி.A.ஜீனத் பேகம் என்பவர் சங்கத்திலிருந்து கிரையம் பெற்ற அன்றைய தினமே திரு.J.இம்தியாஸ் அகமது என்பவருக்கு ஆவண எண்.2147/2017, நாள்.26.05.2017 மூலம் 2400 சதுரடி கடை மனையை அதிக விலைக்கு விற்பனை செய்ய அதிகாரம் அளித்துள்ளதும் மற்றும் மற்றவர்கள் 2017ஆம் ஆண்டின் வழிகாட்டி மதிப்பிலேயே விற்பனை செய்துள்ளதன் மூலம் சங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருச்சி மண்டலம், துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் ந.க.1277/2016 ந.வீ நாள் 27.12.2017ன்படி சார்பதிவாளர், உறையூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட இணை சார்பதிவாளர் I & II ஆகியவர்களுக்கு அரசாணை (டி) 224 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 27.11.2009 மற்றும் பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை அவர்களின் கட்டளை ந.க.1674/2008 இ4 நாள் 21.12.2012 ஆகியவற்றின் நகல்களை பெற்றும் "மேற்கண்ட அரசாணை மற்றும் பதிவாளர் கட்டளையினை புறம்தள்ளி பல்வேறு நிகழ்வுகளில் R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமானச்சங்கத்தின் விற்பனை பத்திரங்கள், உரிமை மாற்று ஆவணங்கள் சார்பதிவாளர் திருமதி.சுசிலா பதிவு செய்துள்ளார். மேலும் அரசாணை (டி) 224–ன்படி குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் முடிவின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் அனுமதி பெற்றுள்ள இடங்களுக்கு மட்டுமே விற்பனை பத்திரங்கள் பதிவு செய்யப்படலாம் எனவும், அவ்வாறு இல்லாத இனங்களுக்கு பதிவுகள் செய்திட வேண்டாம் எனவும் மண்டல துணைப்பதிவாளர் அவர்களால் உறையூர், சார்பதிவகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட கடிதத்தைப் பெற்ற பிறகும் 2017 மே மாதத்தில் திரு.A.முத்துச்செல்வன், திருமதி.A.தில்சாத் பேகம் மற்றும் திருமதி.A.ஜீனத் பேகம் ஆகியோருக்கு ஆவண எண்கள் 2079/2017, 2080/2017 நாள் 22.05.2017 மற்றும் 2146/2017 நாள் 26.05.2017 ஆவணங்களின் மூலம் சதுரடி ரூ.3000/– அரசு வழிகாட்டி மதிப்புள்ள மனைகளை மேற்கண்ட அரசாணையின்படி விலை நிர்ணயக்குழுவின் விலை நிர்ணயம் பெறமாலும், பதிவாளர்(வீட்டுவசதி), சென்னை அவர்களின் அனுமதி பெறாமலும் சதுரடி ரூ.150/– என்ற விலைக்கு உறையூர் சார்பதிவாளர் குற்ற அலுவலர்–3 திருமதி.கு.சுசிலா

பத்திரப்பதிவு செய்துள்ளார். மேற்கண்ட ஆவணங்களின் பக்கம்–2இல் "THE VENDOR society hereby sold the property without breach of G.O.D.No.224 (Housing and Urban Development (HCS) Department dated: 27.11.2009, Direction under section 181 of the Tamilnadu Co-operative Society Act 1983 of the Registrar of Co-operative Society (Housing) Chennai, Rc.No.1674/2008/C4, dated: 21.12.2012" என சான்றளிக்கப்பட்டுள்ளது. ஆக அரசாணை மற்றும் பதிவாளர் கட்டளைப்படி விலை நிர்ணயக்குழுவின் குறைந்தபட்ச விலை நிர்ணயம் பெறாமலும், பதிவாளர்(வீட்டுவசதி), சென்னை அவர்களின் அனுமதி பெறாமலும், மிகமிக குறைந்த விலைக்கு சதுரடி ரூ.150/– வீதம் விற்பனை பத்திரம் பதிவு செய்து, ஆவணத்திலேயே மேற்கண்ட அரசாணை மற்றும் பதிவாளர் கட்டளை மீறப்படவில்லை என பொய்யான சான்றளித்து தான் ஆதாயம் அடைய வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. நிர்வாகக்குழுவிற்கு அரசாணை மற்றும் பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை அவர்களின் கட்டளை ஆகியவற்றை எடுத்துரைத்து அதன்படி விலை நிர்ணயம் பெற்று பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை அவர்களின் முன் அனுமதி பெற்று விற்பனை செய்யப்பட வேண்டும் என எடுத்துரைக்காமல் உள்நோக்கத்துடன் செயல்பட்டு தீர்மானம் எழுதி, நிர்வாகக்குழு தலைவருக்கு உடந்தையாக செயல்பட்டு தீர்மானம் இயற்றியும், பொய்யான ஆவணங்களை புனைந்தும் R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்க முன்னாள் சங்க செயலாளர் குற்ற அலுவலர்–1 திரு.மா.கார்மேகம், சங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார். R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கத்திற்கு சொந்தமான கடைமனைகளை மற்றும் பொது அலுவலக உபயோக மனைகளை நிர்வாக அனுமதியின்றி, விலை நிர்ணயக்குழுவில் குறைந்தபட்ச விலை நிர்ணயம் பெறாமல் முறைகேடாக குறைந்த விலைக்கு விற்பனை செய்து நிதி இழப்பு ஏற்படுத்தி 09.05.2013 முதல் 06.05.2018 வரை பொறுப்பு வகித்த முன்னாள் நிர்வாகக்குழுத்தலைவர் குற்ற அலுவலர்–2 திரு.P.M.முத்துகுமார் @ P.M.குமார் மற்றும் முன்னாள் சங்க செயலாளர் குற்ற அலுவலர்–1 திரு.மா.கார்மேகம் கூட்டாகச்சேர்ந்து சதி ஆலோசனை செய்து கடைமனைகளை விற்பனை செய்ததில் முறைகேட்டில் ஈடுபட்டு, சங்கத்திற்கும், அரசிற்கும் நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள்.

இவ்விரிவான விசாரணையில் திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கத்தின் (R–786) சொத்துக்களை (மனைகள்) 2016–2017ஆம் ஆண்டுகளில் அரசாணைகள், கூட்டுறவு கட்டுமான சங்கங்களின் துணை விதிகள் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) சுற்றறிக்கைகள், செயல்முறைகள், கடிதங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றாமல் செயலற்று போன பழைய ஆணைகளை வைத்து சில உறுப்பினர்களுக்கு 7 மனைகளை விற்பனை செய்ததின் மூலம் முன்னாள் சங்க செயலாளர் குற்ற அலுவலர்–1 திரு.மா.கார்மேகம், மற்றும் சங்க முன்னாள் நிர்வாககுழு தலைவர் குற்ற அலுவலர்–2 திரு.P.M.முத்துகுமார் @ P.M.குமார் இருவரும் பொது ஊழியராக இருந்து கொண்டு திருச்சி கூட்டுறவு கட்டுமான சங்கத்திற்கு சொந்தமான மனைகளை அரசு வழிகாட்டி மதிப்பை விட பல மடங்கு குறைத்து பல தனி நபர்கள் (சங்க துணை விதிகளுக்கு புறம்பாக) ஆதாயம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் கிரையம் செய்து கொடுத்து, R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்கத்திற்கு ரூ.6,55,97,800/– நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளதும், திரு.திருசங்கு என்பவருக்கு மூன்றாவது முறையாக 6800 சதுரடி பொது அலுவலக உபயோகத்திற்கான மனையை விற்பனை செய்ததில் ரூ.33,34,000/– பணத்தை சங்க கணக்கில் வரவு வைக்காமல் கூட்டு சதி செய்து, உட்கருத்துடன் பொய்யாவணம் புனைந்து, அதன் மூலம் பொய் கணக்கு தயாரித்து, குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்து, முறைகேட்டில் ஈடுபட்டுள்ளதும், மேலும் குற்ற அலுவலர்–3 திருமதி.கு.சுசிலா குற்ற அலுவலர்கள் (1) மற்றும் (2) ஆகியோருடன் கூட்டு சேர்ந்து, ஆவணங்களில் சொத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பு குறைத்து காட்டப்பட்டுள்ளதற்குரிய முறையான ஆவணங்களை கேட்டு பெறாமலும், கிரைய பத்திர ஆவணங்களை முறையாக பரிசீலிக்காமலும், மேற்படி மனைகளின் அரசு வழிகாட்டி மதிப்பு தெரிந்தும், அரசு வழிகாட்டி மதிப்பில் கிரைய பத்திரம் பதிவு செய்யாமல் பத்திரபதிவுத்துறைக்கு ரூ.2,50,800/– வருவாய் இழப்பு ஏற்பட உடந்தையாக இருந்ததுள்ளார். எனவே, குற்ற அலுவலர்கள் (1)திரு.மா.கார்மேகம், திருச்சி, தில்லைநகர், R–786 திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்க முன்னாள் செயலாளர், (தற்போது மத்திய அரசு அலுவலர்கள் கூட்டுறவு கட்டிட சங்கம், பொன்னகர், திருச்சி) (2) திரு.P.M.முத்துகுமார் @ P.M.குமார், R–786

திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டுமான சங்க முன்னாள் நிர்வாகக்குழுத்தலைவர் மற்றும் (3) திருமதி.கு.சுசீலா திருச்சி, உறையூர் முன்னாள் சார்பதிவாளர்(மாவட்ட பதிவாளர் நிலை), தற்போது மாவட்ட பதிவாளர்(நிர்வாகம்), கும்பகோணம் ஆகியோர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபணமாவதால், குற்ற அலுவலர் 1 முதல் 3 வரையானவர்கள் மீது இ.த.ச சட்ட பிரிவுகள் 120(B), 109, 463, 465, 468, 471, 477(A), 409 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம்–1988 பிரிவு 13(2) உட்பிரிவு13(1)(c) மற்றும் 13(1)(d)–ன்படி குற்ற செய்கையில் ஈடுபட்டுள்ளார்.

மேற்கண்ட குற்றச்சாட்டு தொடர்பாக காலம் 7–இல் கண்ட எதிரிகள் 1 முதல் 3 வரையானவர்கள் மீது திருச்சி ஊ.த.க பிரிவு கு.எண். 02/2020 இ.த.ச சட்ட பிரிவுகள் 120(B), 109, 463, 465, 468, 471, 477(A), 409 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம்–1988 பிரிவு 13(2) உட்பிரிவு 13(1)(c) மற்றும் 13(1)(d)–ன்படி என்னால் 01.06.2020 ஆம் தேதி 10.30 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இந்த முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம் திருச்சி அவர்களுக்கும் மற்றும் அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

M. [signature] 1/6/2020
Inspr, VSAC
Trichy.